ஓலை 120| ஓசை 243| மே 2025

# அகர முதல இலக்கியப் பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ம] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்து ளெல்லாந் தலை

## பொருள்

செவியால் கேட்டறியும் செல்வம், செல்வங்களுள் ஒன்றாகப் போற்றப்படும். செல்வமாகும்;
அச்செல்வம் செல்வங்கள், எல்லாவற்றிலும் தலையானதாகும்.

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி


97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.


## அகர முதல இலக்கியப் பேரவை

சையொத் திருந்தால் ஐய மிட்டுண்!

நேரிசைப் பஃறொடை வெண்பா



வறண்டே பசித்த வயிறாக வானம்
வறண்டதைக் கண்டுவள மாரி - வறட்சியை
நீக்கிடவே உப்புடை நீர்செல்வம் ஆழ்கடல்
நீக்கி வழங்கிடும் நீள்மனமாய் - ஆக்கமுடன்
மண்ணுயிர் வாழ வழங்கும் மழையாகத்
தண்ணீரை மொத்தம் தனக்கென - எண்ணிடாமல்
வாரி மலையருவி மாண்புடன் ஆற்றிலிட்டே
ஊரிலுள்ளோர் வாழநீர் ஊட்டுதலாய் -பேரியக்கப்
பண்பாட்டைப் பாங்குடனே பைந்தமிழர் போற்றியேதான்
உண்டதுபோல் வேற்றார் உலகிலுண்டோ?-கண்டறிந்தே
எந்தமிழாப் பகிர்ந்துண்டே என்றும் விருந்தோம்பல்
இந்நிலத்தில் காண லினிது.




இலக்கணக் குறிப்பு:

இரண்டடிகளுக்கும் ஓரெதுகை வரும். இரண்டடிக்கோர் தனிச் சொல் பெற்று வரும். ஒவ்வொரு அடியிலும் முதல் சீரிலும் மூன்றாம் சீரிலும் பொழிப்பு மோனை வரும். அதிகபட்சம் பன்னிரண்டு அடிகளில் முடியும். வெண்டளை சீருக்கு சீர் அமையும். வெண்பாவின் ஈற்றடி மூன்று சீர் வந்து ஈற்றுச் சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்ற வாய்பாட்டில் முடியும். குற்றியலுகரம் பார்க்க வேண்டும்.


நெருப்பலைப் பாவலர் இராம. இளங்கோவன்

## எண்சீர் மண்டிலம்

மா மா காய் விளம்
மா மா காய் விளம்.

நாட்டை நீயும் நாடோறும் போற்றிடு
நாட்டின் வளத்தை நலமுடனே காத்திடு.

கூட்டம் பேணிக் குதூகலத்தைப் பெற்றிடு
கூட்டாய்ச் சேர்ந்தே கூடிவினை ஆற்றிடு.

காட்டைத் திருத்தி கவின்மிகுசெய் யாக்கிடு
கனிவாய் பிறர்க்கும் உதவிகளைச் செய்திடு

நாட்டை உயர்த்த நலிவினையே அகற்றிடு.
நாட்டம் கொண்டே நள்ளலரை வென்றிடு.

கவிஞர் செ. கலைவாணி

# வான் சிறப்பு

## பா வகை:இன்னிசைக் கட்டளை வெண்பா

பசிப்பிணி இன்றியே பாரும் செழிக்க
புசித்திட நாளும் புவியும் சிறக்க
விசும்பின் பொழிவை விரும்பியே ஏற்போம்
அசும்பின் வரவே அழகு.

வான்மழை வந்திட வாழ்வும் உயருமே
கோன்போல் கொடுத்தே கொடையில் சிறக்குமே
கார்முகில் நீயும் கருத்தாய் பொழிந்திட
ஏர்போல என்றும் இரு.

கவிஞர் விஜயலஷ்மி காளிதாசன், கோவை மாவட்டம்

தனி மரம் தோப்பாகாது
தனி மரத்தையும் வெட்டுகிறான்
மரம் வெட்டி

##

கந்தலானாலும் கசக்கிக்கட்டு
கேள்விக் கேட்கிறான்
காயும் வரை எதைக் கட்டுவது?

##

புயலுக்குப் பின் அமைதி
வாழ்ந்தவர் மாய வந்தது
புதுக் குடியிருப்பு



கவிஞர் சோ. ஸ்ரீதரன், இலங்கை

# சீவக சிந்தாமணி

7. கனகமாலையார் இலம்பகம் .

"காதலங் காளை யென்றான்", மன்னன்
வாதகம் இல்லாமல் சீவகனைப் புகழ்ந்தான்
"சாதனையில் சிறந்த வில்லாளனாக இருக்கிறாய்
மாதவனே உன்னை கௌரவிக்க விரும்புகிறேன்"
(வாதகம் : இடையூறு )
"இன்னமும் விசயன் விற்பயிற்சி அறியாதவன்
பின்னால் இருக்கிறார்கள் நான்கு புதல்வர்கள்
உன்னைப்போல் அவர்களையும் வீரனாக்குக
என் வேண்டுகோள் இதுவே செய்வாயாக"


அதற்கு சீவகனும் ஒப்பினான் மகிழ்ச்சியாக
எதற்கும் தயாராக இருக்கும் இளவல்
அதற்கு அக்கலையைப் பயிலத் தொடங்கினான்
இதற்காகவே வந்தவன் போலானான் சீவகன்

புதல்வர்கள் வில்வித்தையை சிறப்பாகக் கற்றனர்
சுதசனப் பயிற்சியும் கற்றுத் தேறினர்
"பிதாமகனாக அனைத்தும் அறிந்தவன் இவன்
சதாகாலம் இவன் உதவி தேவைதான்"
(சுதசனம் : ஆயுதம், சதாகாலம் : எப்பொழுதும் )

யோசித்தான் தடமித்தன்,"என்ன செய்யலாம்?"
பாச மகள் கனகமாலை நினைவில்
நேசமானவளுக்கு மணம் முடிக்க வேண்டும்
யோசிக்க இடமில்லை இவனே மணாளன்

"உன்னால் எம் ஐந்து புதல்வர்கள்
என்னே அதிசயம் சிறந்த வீரர்கள
உன்னைப் போலவே சகலமும் கற்றார்கள்
என்ன கைம்மாறு செய்ய, அறியேன்?"

"ஒன்று சொல்லவா உணர்ந்து கேட்பாயா
என் ம்கள் கங்கமாலை நினக்குரியவள்
இந்நாடே உன் நாடாக இருந்துவிடு
என்ன நினைக்கிறாய் உடன் கூறு"



கனகமாலையார் அழகு நகரில் ஈடில்லை
தன்னடக்கம் குணவதி வேல் விழியாள்
மாசு மருவற்ற அவள் இன்முகம்
வீசு தென்றலாக அவளைக் கண்டான்

மனம் மயங்கினான் சம்மதம் என்றான்
கனகமாலைசீவகன் மணம் முடிந்தது
தன்னை மறைத்து அவளோடு சில நாட்கள்
இன்பந்தரும் இளநலத்தைத் துய்க்கலுற்றான்

அவளோடு சீவகன் வாழ்கின்ற நாளிலே
கவலையில் மூழ்கிக் கிடந்தனர் பெற்றோர்
சீவகனைத் தேடி அலைந்தனர் உற்றோர்.

தொடரும்...

கவிஞர் ந. திருக்கோழு

# கருவாச்சி கண்ணாத்தா

கண்ணுக்குள் நிக்கிறியே
கருவாச்சி கண்ணாத்தா

மொட்ட வெயிலு
தொறத்தி வெளயாடும்
என்சோட்டு சிறுக்கி
என்னோட ராசாத்தி!

கருக்கலில் கண்முழிச்சு
கருவாட்டுக் குழம்புவச்சு!
கொசுவம் வச்ச
சுங்குடிச் சேலைகட்டி

சிறகடிச்சுப் பறக்கும்
சிட்டுக்குருவி போலவே
என்மனசப் பறிச்சு
எங்க போன?

உன்னோட நெனப்புல
உலகமே மறந்திருச்சு!
மேற்கே விழுந்த
செவ்வானம் சிரிக்குது!

மேகம் கருக்குது
மேனி கொதிக்குது!
தாகம் தீராம
தவிச்சுக் கெடந்து

தண்ணி குடிச்சாலும்
வேம்பா கசக்குது!
வேப்பெண்ணெய் குடிச்சா
சர்க்கரையா இனிக்குது!

சந்தனம் பூசாம
நெஞ்சமெல்லாம் மணக்குது
சாடைப் பேச்சுல
ஊருசனம் சிரிக்குது!

கண்ணுக்குள் நிக்கிறியே
கருவாச்சி கண்ணாத்தா!
சட்டுனு வாபுள்ள
சேர்ந்து வாழ்ந்திடலாம்!

கவிஞர் யாழிசைசெல்வா, தேனி மாவட்டம்



அகர முதல

# விதியின் ஆட்டம்

அவர் மிகு நிதி சேர்த்தார்;
இவர் மக்களை ஏமாற்றிப் பிழைத்தார்;

என்றே சொல்லியே
பாரெங்கும் திரிந்தார்.

சதி செய்யும் சமர்த்தர் அவர்.
மெத்தப் படித்த மதியாளர் அவர்.

தன்வினை தன்னைச் சுடும்;
வேறென்ன?

மிதிக்கும் விதிக்கு
தப்பாமல் தலைவணங்கி,

தன் வீட்டில் தனியாய் நின்றார்.
குங்கலியம் சுமந்த கழுதையென.



கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

# யார் அவள்?

காதலன் காதலிக்கு எழுதும்
கவியல்ல இது.
அவள் — அவளுக்கே எழுதும் கவி!

ஒற்றைத் தூணின் பின்னால்
ஒட்டிக் கொண்டு
உலகை வேடிக்கை பார்க்கும் அவளுக்கும்,
விருப்பங்கள் இல்லையா என்ன?

நான்கு சுவர் அறைக்குள் அவளை
முடக்க நினைத்தால்,
ஒரு சுவருக்காவது
அவள் ஆசைகளை ஓவியமாய்க் கிறுக்கி,
அழகு பார்க்கும் உரிமையைக் கொடு.

அவளுக்கென நூல் எழுத நினைத்தால்,
அதில் ஒரு பக்கமாவது
"அவள் வென்றுவிட்டாள்" என்று எழுதி விடு.

"தனிமை அவளுக்கு எதற்கு?"
என கேட்க முனையும் போது,
"அவளுக்கு துணை யார்?"
என்று சிந்தித்துக் கொள்.

தூரத்தில் நின்று
அவளை விமர்சிக்க முன்,
ஒருமுறையேனும்
அவளிடம் பேசிப் பார்.

"அவளுக்கு என்ன?" என
கடந்து செல்ல முன்,
"ஏதும் வேண்டுமா?" என
ஒரு வார்த்தை கேட்டுப் பார்.

"ஏதுமில்லை" என்று
அவள் சொன்ன போதும்,
அவள் கண்களை
ஒருமுறை உற்றுப் பார்.
அவை பேசும்
அவள் விழிகளில் ஒட்டிக் கொண்ட ஏக்கமும்
அதன் வழி காய்ந்து போன கண்ணீரும்
தீராத மொழிகளில் உன்னிடம் பேசும்.

யார் இவள்?
இவள் அடிமையுமல்ல
ஆடம்பரமானவளுமல்ல
தன் ஆசைகளுக்கும் இலக்குகளுக்கும்
நடுவில் சிக்கிக் கொண்டு,
உலகம் வீசும் வார்த்தைகளால்
அடைக்கப்பட்ட பூமியில்,
சுவாசிக்கத் திணறும்
நடுத்தரப் பெண்.

கவிஞர் அதீபா ஹஸன், காத்தான்குடி

# மரத்திடம் மன்னிப்பு கேட்டமனிதன்

தலை நிமிர்ந்த படைப்பு இரண்டு
ஒன்று மனிதன் இன்னொன்று மரம்
மனிதனுக்கு கார்பன் டை ஆக்சிஜனை வெளியே
விடுவதும் ஆக்சிஜனை உள்ளே எடுக்கவும்.


மரத்திற்கு கார்பன்டை ஆக்சிஜனை உள் இழுத்து
வெளியே ஆக்ஸிஜனை கொடுக்க இறைவன்
படைத்த படைப்பு நீ
மனிதனுக்கு மரம் வேண்டும்.

மரம் நட மனிதன் வேண்டும்.
மனிதன் மறந்ததேனோ
மரத்தை

மண்ணும் அனலாய்
விண்ணும்நெருப்பை
மனிதன் மீது இறக்குதே
மரம் இல்லாமல்

மறந்ததேனோ மனிதா
இனியாவது மரத்தை
நடுவாயா.

இனி மனிதன் நடக்க ஆரம்பித்து விட்டான்
மரத்தை நடுவதற்கு
நம் சந்ததி வேண்டுமென்றால்
மறம் வேண்டும் என்பதை
புரிந்து
மன்னித்துவிடு மரமே
நன்றி இறைவா



கவிஞர் ஜெ. தேவி ராஜசேகர், சென்னை

# அட்சய திருதியை

சித்திரை தந்த நற்பரிசு
சித்திரை வருடப்பிறப்பிற்கு
பின்னே வருகிறாளே அட்சய திருதியை !
அனைவருக்கும் மகிழ்ச்சியை தரவே
விசுவா வசு வருடத்திலேயே சிங்காரமாகவே
நடை நடந்து வருகிறாளே
செல்லப் பெண்ணாய்!
சுப முகூர்த்த நாளிலே சுந்தரமாகவே,
மகிழ்ச்சி பொங்கவே, வாழ்வு வளம் பெறவே,
சுபிட்ச நாளிலே தங்கத்தை வாங்க,
தங்கத்தை தக்க வைக்க வாங்குவோமே
சொர்ணத்தை!
ஏழைகளின் சொர்ணம்
சொப்பனத்திலே மட்டுமே!
சூரியனிடமிருந்து பாண்டவர்கள் பெற்ற
அள்ள அள்ள குறையாத
அட்சய பாத்திரம் பெற்ற நாளும் இந்நாளே!
கடலில் உற்பத்தியாகும்
உப்பே எல்லா செல்வத்திலும் சிறந்ததே!
உப்பையும், மஞ்சளையும் வாங்குவோமே!
நம்மால் முடிந்த உதவிகளை
ஏழைகளுக்கு பகிர்வோமே!

கவிஞர் ஆ. கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை

# முதிர்கன்னி

திக்கு தெரியாத காட்டில்
தொலையும் தேவதைகள்
காலச்சக்கரத்தின் மடியில்
சாபம் ஏந்தியவளாகவே
மனம் தொலைத்த
மரக்கட்டைகள்



கவிஞர் சுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டணம்)

# விளை நிலம்

நம் நாடு பாரதம் பெருமையின் உச்சம்
ஒற்றுமையில் நாம்தான் உலகத்திற்கே உதாரணம்
மனித நேயத்தில் மாண்பு போற்றும் நல்ல நாடு
சிறப்புகள் பெருமைகள் ஆயிரம் கொண்ட நாடு
அத்தனையும் இருந்தாலும்
லஞ்ச லாவண்யம் நாடே நாறுது
ஊழல் பெருச்சாளிகள் சொகுசாய் வாழுது
விலைவாசி உயர்வென விழி பிதுங்குது
ஓட்டை பானையா பொருளாதார நிலைதான்
சோத்து மூட்டைக்குள்ளே பெருச்சாளியாய்
உள்ளுக்குள்ளே விருச்சமாய் *விஷசெடி* வளருது
அரசும் அதிகாரமும் கவனிக்க தவறு
களை எடுக்கும் காலம்தான்
நல்ல பயிரின் *விளை நிலமாய்* பாரதம் மாறுமே

கவிஞர் ஜேப்பி@பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

# காற்றுள்ள போதே!

காற்று
கதவைத் திறக்கும்.
அதனை இழுத்து மூடும்.
***

திறக்கும் போது
பிறக்கிறோம்.
இழுத்து மூடும் போது
இறக்கிறோம்.
***

இதற்கிடையில்
சிறக்கிறோம்.
செட்டை கட்டிப் பறக்கிறோம்.
***

பயணச் சீட்டு முடிந்ததும்
பாடை கட்டிப் போகிறோம்.
***

பாவ வீதி ஒரு புறம்.
புண்ணிய வீதி மறு புறம்.
***

ஓம் மனிதா
ஓம்!
***

காற்று
கதவைத் திறக்கும்.
அதனை இழுத்து மூடும்.
***

இப்போது பதில் சொல்
உனக்குச் சுவர்க்கம் வேண்டுமா?
இல்லை இல்லை
நரகம் தான் வேண்டுமா?
***

புரிகிறதா, இப்போது
காற்றுள்ள போதே தூற்றிக் கொள்
பாவங்கள் அனைத்தும் பறக்கட்டும்!

கவிஞர் விவேகவெளி தமிழேந்திரன், (வெல்லபதியான்), கிழக்கு மாகாணம்

# தேடல்

உன்னைக் காணாத
விழிகள் இரண்டும்
உன் மீன்
நயனங்களைக் காண
என் கண்ணை விட்டு
கழன்று ஓட
நினைப்பதேனோ.

கவிஞர் நாகசுடர் சித்திரைபாண்டி



அகர முதல

# கிராமத்து வாழ்வு

அமைதியான வாழ்வு
அன்பைப் பொழியும் வாழ்வு
கிராமத்து வாழ்வு
கிடைத்திடா வாழ்வு!

மருதம் பாடிட
மணக்கும் அதன் சுற்றுப்புறம்
விருந்து படைத்து பரிமாறும்
விருந்தோம்பல் களைகட்டும்!

ஆடம்பரமற்ற வாழ்வு
அடுத்தவரை நோக்கிட செய்யும்
தான் என்று நோக்காது
தனித்துவம் தந்திடும் வாழ்வு!

ஓடையில் ஓடிடும் நீர்
பாடியே நிற்குது
கிராமத்து எழிலை!
பராமரித்து நிற்போம் அதனை!

மண் குடிசை வீடுகள்
கண் இல்லை அதுக்கு
மொக்காடு போட்டிட்ட கூரை
முழுசா இயற்கையின் சோடனை!

அள்ளி அள்ளி
அழகு தரும் வாழ்வு
ஆண்டவன் கொடுத்தவை!
நாகரிகம் வந்தது.
நடைபிணமாகியது
"நம் வாழ்வு"

கவிஞர் திருமதி ஜூ. கிங்ஸ்லி, கிழக்கு மாகாணம் (இலங்கை)

# என் கவிதையின் காதலி

காத்திருந்து எதிர்பார்த்திருந்து
காதலிக்கிறேன் என்றாள்
உயிருக்கு உயிராய் நேசிக்கிறேன் என்றாள்
அணு அணுவாய் ரசிக்கிறேன் என்றாள்

ரொம்ப ரொம்ப பிடிக்கும் என்றாள்
அவ்வளவு பிடிக்கும் என்றாள்
அத்தனையும் பிடிக்கும் என்றாள்
மொத்தமாய் பிடிக்கும் என்றாள்

பார்க்காமல் இருக்க முடியவில்லை என்றாள்
ஒவ்வொன்றாய் நேசிக்கிறேன் என்றாள்
என்னையும் விட அதிகம்
விரும்புகிறேன் என்றாள்
ஆம் அவள் அதிகமாய் நேசித்தாள்
என்னையல்ல என் கவிதைகளை

என் கவிதையின் வரிகளை
என் ஒவ்வொரு எழுத்துக்களை
அணுவணுவாய் ரசித்து
உயிருக்குயிராய் நேசித்தாள்

என் வாசகி அவள்
என் கவிதையின்
காதலி அவள்

கவிஞர் நபீல் இப்னு இஸ்மாயில், நமடகஹவத்த, கலேவெல மாத்தளை

அத்தனை
கூட்டங்களுக்கு மத்தியிலும்
தனிமை
ஏதோவொரு
மூலையை தேடி
ஒளிந்து கொள்கிறது

வாசிப்பின்
அத்தனை முடிவுகளும்
தொடர வைக்கின்றன
மீண்டும் ஒரு
புதிய தேடலை

நிறக்குருடாய்
அத்தனை படைப்புகளும்
வெயில் கண்ணாடியில்
கருப்பாக

கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# குரலோசை

பார் அழைத்திட்ட ஓசை
அதை விஞ்சிய உன்ஓசை
வஞ்சியழகில் இமைகளைந்த ஓசையாய்
உள்ளம் மெய்சிலித்து
கவிமழை பொழிந்து
ஆசைவார்த்தை கூறா ஓசை
அது உன் குரலோசையன்றோ

என்னவன் வரமன்றோ
தவப்பயனன்றோ
என்னவன் குரலோசை
தெய்வீக ஓசையல்லவா

கவிஞர் இ. தேவர்மன், இலங்கை

உன் குணம் அறிந்திட பிறர்
உன் நட்பைத் தேடிடுவர்

பிறர் உன்னை ஏய்த்திடினும்
நண்பனே உனக்கு ஆறுதல் உரைத்திடுவான்

அனைவரும் நின்னைக் கைவிடினும்
ஆத்மார்த்தமான நண்பன் உன்னுடன் நின்றிடுவான்

கஷ்டப்படும் நேரத்திலும் கூட
கரம் கொடுத்து உதவிடுவான்

நீ செய்திடும் தவற்றிற்கு
பழி சுமந்து வாழ்ந்திடுவான்

பெற்றோரிடம் மறைத்திடும் சிறுவிடயமும்
நண்பனிடம் சிநேகமாய் பேசிடுவான்

கண்ணியமான நட்பின் முன்னால்
காதலும் தான் தோற்றிடுமே

நண்பன் உடன் இருப்பின்
நந்தவனமாய் ஆகிடுமே உன் வாழ்வும்



கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி



அகர முதல

# அச்சமின்றி

எப்பேர்ப்பட்ட
காதல் கதைகளின்
எச்சங்கள் நாம்

எப்பேர்ப்பட்ட
நேசப் பிணைப்புகளின்
மிச்சங்கள் நாம்

என்றும் துய்த்துக் கிடக்கிறோம்
அன்பறுத்த துன்பம்
அச்சமின்றி!




கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

# அறிவு

அறிவைத் தேடு
இறைவன் உன்னை நேசிப்பான்
அறிவை தேடு
பாதுகாப்பு உண்டாகும்

அறிவை தேடு
அது ஒளியைத் தரும்
அறிவைத் தேடினால்
துன்பமின்றி வாழலாம்

அறிவுரை தேடு
மதிப்பு கிடைக்கும்
அறிவைத் தேடு
உதவி கிட்டும்

அறிவைத் தேடு
பலருக்கு உதவிடலாம்
அறிவை தேடு
முன்னேற வாய்ப்பு உண்டு

அறிவை தேடினால்
சந்தோஷமாக வாழலாம்
அறிவைத் தேட நல்ல புத்தகங்களை
நேசித்து வாசித்து உன்னதம் பெரு.

கவிஞர் ஏ. எம். முர்ஷிதா பேகம், அக்குறணை

# துணிந்தெழு!

உன்பலம் எதுவென்று உணர்ந்து செயலாற்று!
எண்ணித் துணிந்திடு! தொடங்கிய பின்னர்
துவளாது முன்னேறு! தடைகள், தவறுகள்
எவ்வளவு வந்தாலும் கடந்து முன்னேறு!
இரவுகள் நிரந்தரமாய் இருப்பதில்லை என்றும்!
பரிதியின் வரவால் பரவிடும் சுடரொளியும்!
துன்பங்கள் எல்லாம் உனக்கான சோதனைகள்!
துணிந்தால் வெற்றி தேடிவரும் உன்னிடத்தில்!
வானமே எல்லையென்று வரையறு உனக்குள்ளே!
இழந்ததை எண்ணி மனவருத்தம் கொள்ளாதே!
விழுந்தாலும் மீண்டெழு! வறட்சி, பெருமழை
வீழ்த்தும் புயல்தாங்கி வேரூன்றும் விருட்சம்போல்
ஆழ்மனத்தில் உறுதியுடன் அயராமல் போராடு!
வீழ்ந்தாய் என்றால் முடிவல்ல அதுவொன்றும்!
எழுதலுக்கான தொடக்கமென எண்ணிடு நீயதனை!
காலம் கைகூட கனவுகள் நனவாக
ஞாலம் உன்பேர் சொல்லும்! சிகரம்உன்
காலடியில்! விரைவில் திறந்திடும் வெற்றிவாசல்!

கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி

# பல வலிகள்

பெண்களின்
உறுப்பே அதிகம்
விற்பனையாகின்றன
ஆண்களின் நாவினில்.

முட்டாள்களின்
முன்னிலையில்
நான் பிடித்த முயலுக்கு
மூன்று கால்.

மரத்தில்
கரைந்த காகத்திடம்
இருந்து கொட்டுண்டது
கறை.

அவன்
அவளுக்காக எழுதவில்லை
கவிதைகள் ஆனால்
அவளால்தான் எழுதுகிறான்
கவிதைகள்.

வாய்
முணுமுணுக்கும்
திரையிசைப் பாடலுடன்
தீர்ந்து போகிறது பல வலிகள்.

கவிஞர் கோ. தனுசன், மட்டக்களப்பு (இலங்கை)

# பிரிவின் வலி

நீண்ட நாள் பிரிவின் பின்
நீ தந்த முத்தங்களும்
இறுகிய அணைப்பில்
மூச்சுக் காற்றின் சத்தமும்
நின் தரிசனம் தேடி
நித்தம் அலைகிறது..

பசியுமில்லை
தாகமும் எனக்கில்லை
என்னோடு நீ இருந்தால்
போதும் எனக்கு.
அத்தனையும்
உன் அருகினில் தீரும்

கண்கள் மூடினாலும்
கனவிலும் நீயாக
மேனி தடுமாறுகிறது
உனைச் சந்திக்காமலே
இருந்திருக்கலாம்
இதயம் கிடந்து தவிக்கிறது

எதுவும் வேண்டாம்
என்று கனவோடும்
நினைவுகளோடும்
வாழ முடியவில்லை
வார்த்தைகளால்
சொல்லவும் முடியவில்லை



கடல் கடந்து
நெடுந் தரை தாண்டி
கட்டியணைத்திட
கவிஞனால் தான் முடியும்
ஆனால் எப்படி
உன்னால் முடிகிறது

நிழலாய் நீ மறையும் வரை
நான் பார்த்துக்கொண்டே
இருந்ததையும்
கண்ணீரோடு நான்
திரும்பி வந்ததையும்
அறிந்திருக்க ஞாயமில்லை.

வேறென்ன செய்வேன்
வெறும் கனவோடு
வாழ்நாள் முழுவதும்
வலிகள் சுமந்து
வாழ்வேனோ புரியவில்லை
புரிகிறது புதிதான
பிரிவின் வலி கொடூரமானது

கவிஞர் செண்பகச் சோலையாள், ஆய்ஷ்

# சருகு

ஈரம் படாத வரை
கருக்கப்படாத வரை
சிறகு இல்லாமலும்
துடிப்பு இல்லாமலும்
பறந்து கொண்டும்
உருண்டு கொண்டும்
வாழ்ந்து கொண்டுதான்
இருக்கிறது சருகு

கவிஞர் ஆதன் ஆரா, அருப்புக்கோட்டை

வியர்வை துளிகளை ஆடையாய்
கொண்டு சாலைகளில் நிழலாய்
உலரும் நிஜங்கள் இவர்கள்

கூலிகள் என்னும் பெயரெச்சத்தின்
உயிர் எழுத்துக்கள் இவர்கள்

குறைந்த வருமானத்தில் குடிசை
பகுதியின் கந்தலான எல்லைச்
சாமிகள் இவர்கள்

காலந்தோறும் சுரண்டப்படும்
அடிமைகளின் அடையாளமாய்
இவர்கள்

தெருவோர நிழற்குடைகளின்
கீழ் காத்திருப்பின்
நேரங்களாய் இவர்கள்

மே மாதம் மட்டுமே
கொண்டாடப்படும் வேதனைகளின்
நினைவுகளாய் இவர்கள்

கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# அன்பு

அன்பென்ற அதிசயம்
அலைமோதிச் செல்கையில்
அதீதச் சுவை கொண்டு
அரவணைத்துக் கொள்கிறது
அழியா நினைவுகள்.
உயிர்மேலே உலாவி
உவகை கொள்கிறது
நனவோடு.



கவிஞர் சேஹூ மொஹம்மது பெனாஸிரா, முஸ்லிம் ஹல்மில்லாவ, மதவாச்சி

# திருவிழாவில் ஒரு தேவமயில்

இயற்கை அழகும் இன்பம் தந்தது
இனிமையான காதலும் இன்னுயிரைக் கொடுத்தது
மழை மேகம் மனதைத் தொட்டது
மனசும் நிம்மதியாய் மகிழ்ச்சி பொங்கியது
திருவிழா நாளில் திண்ணைகள் நிறைந்தது
திசையெங்கும் மானுடரை திணறடிக்க வைத்தது
தேவமயிலும் தெருவெங்கும் தேவ அமுதமானது
தோகைகள் விரித்தாட தோட்டமும் பார்த்தது
தெய்வீகக் காதலும் தெய்வத்திடம் பேசியது
தெவிட்டா இன்பத்தை தென்னையும் கொடுத்தது
காதல் மூன்றெழுத்தில் காத்திருப்பும் அவசியமானது
காதோர கதையும் காதலைச் சொல்லியது
பக்தியால் இறையில்லங்கள் பரவசம் அடைகிறது
பக்தர்களால் கேட்டதும் பஞ்சாமிர்தமும் கிடைத்தது
அமைதியால் உள்ளங்கள் அழகுற அமைகிறது
அன்பானவர்களால் படைத்த அகிலமும் அழகாகிறது
விழாக் கோலங்கள் விழாவிற்கே அழகாகியது
விளக்குகளின் வண்ணங்கள் வித்தியாசம் கண்டது
மேகமும் கறுக்க மேளதாளங்கள் ஒலித்தது
மழையும் பெய்ய மயிலும் ஆடியது
வண்ணங்களும் எண்ணங்களும் வலிமையைக் கொடுத்தது
பார்ப்பவர் கண்கள் பாவையைத் தேடியது
பார்த்தாலும் திரைமுகம் பாசத்தோடு பரிதவித்தது
வாராய் திருவிழாவிற்கு வாராய் தேவமயிலே.

கவிஞர் ம. செ. அ. பாமிலா பேகம்

# இன்னும் உயிரோடு

வீழ்ந்தேன் பலமுறை, விழிகள் நனைய
வேர்த்தேன் துயரில், கனவுகள் கலைய
ஓரடி முன்னேறும் விசுவாசம் கொண்டு
இன்னும் உயிரோடு புன்னகை மொய்த்தேன்

அழகாய் அணையும் ஒளி தெருவோரம்
அழுகை மறைந்தது விழி நனையோரம்
மறுபடியும் தூண்டும் நிழல் போலவே
இன்னும் உயிரோடு கனவைப் பின்னேன்

அலைகளோ காற்றோ புயலோ வந்தாலும்
அழிக்க முடியாத நம்பிக்கைக் கட்டிடம்
சிதறி விழுந்தேன் நான் சிறகடித்தாலும்
இன்னும் உயிரோடு நடனம் புரிந்தேன்

வழி மாறினாலும் நடையோ சோராது
மழை தட்டினாலும் கனவே ஓயாது
பசுமை விரியும் புதிய நிலவாய்
இன்னும் உயிரோடு உதிர்வை மீட்டேன்

உலகம் தடுத்து நிற்க, காலம் சுழற்சி
உணர்வின் தீயால் தன்னை உருக்கி
தோல்வியின் மேல் நான் கோபுரம் கட்டி
இன்னும் உயிரோடு கவிதை பாடினேன்



கவிஞர் ம. ஹரீஷ், பாலூர், செங்கல்பட்டு மாவட்டம்

# குடிச்செயல்வகை

## அதிகாரம் : 103

குடிப்பெருமைக்கான கடன்செய்ய
நொடிப்பொழுதும் சோர்வடையேன்.
எனும் நற்சிந்தனைபோல்
மேலானதொன்று வேறில்லையாம்.

முயற்சியுடன் நிறையறிவுமாம்
இடைவிடாச் செயலிரண்டால்.
ஒருவனின் குடிப்பெருமை
தானே உயர்ந்துவிளங்குமாம்.

தன்குடிப்பெருமை உயர
தகுஞ்செயல் புரிவோனுக்கு.
நல்லூழ் தானேமுன்வந்து
அவனுக்குதவி நிற்குமாம்.

தன்குடியின் மேன்மைக்குரிய
செயல்முனைந்து விரைவோர்க்கு.
அவரறியாமல் அச்செயல்
தானே நிறைவெய்திடுமாம்.

குற்றந்தவிர்த்து குடிப்பெருமையின்
செயல்விழைவோனை உலகோர்தம்.
சுற்றமாய்க்கொண்டு விரும்பி
சூழ்ந்து கொள்வராம்.

நல்லாண்மையென்ப தொருவனுக்கு
அவன்தன் குடிப்பெருமையாளும்.
தன்மையைத் தனக்குள்
உண்டாக்கிக் கொள்வதாம்.



போர்க்களத்தில் வன்கண்மையோரே
போரைத்தாங்குவ ரஃதுபோல்.
குடிப்பெருமை தாங்கவல்லோரே
சிறப்புப் பொறுப்பேற்பராம்.

குடிப்பெருமை உயரச்செய்ய
காலநேர மேதுமில்லையாம்.
சோம்பல்கொண்டு தன்மானம்
கருதுவோரால் குடிப்பெருமைகெடுமாம்.

தன்குடிக்கு வருங்குற்றமதை
வாராமல்காப்போனின் உடம்பு.
அம்முயற்சியால் துன்பமன்றி
இன்பத்திற்கே இருப்பிடமாகுமாம்.

துன்பம்வருங்கால் உடனிருந்து
தாங்கிக் காக்கவல்லோன்.
இல்லாகுடி கோடரிப்பட்டு
வீழ்ந்த மரம்போல்வீழுமாம்.

கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோவில்

# பெற்றோர்

அழகான கனவாய் என் வாழ்வில் வந்தீர்
அன்பின் ஒளியாய் என்பாதை தொட்டீர்
உழைப்பின் பாடலாய் உயிர் தந்தீர்
உலகில் உங்களுக்கு ஒப்பானோர் இல்லை.

அருவியின் நீராக நன்மை வழிந்தீர்
அகநெஞ்சில் நம்பிக்கையைக் கொட்டினீர்
என் ஓராயிரம் விழிகளில் சிரிப்பாய்
என்றும் நிலைத்திருக்கும் ஒளியாய்

நன்றி சொல்லும் வார்த்தைகள் குறைவாகும்
உங்கள் பாசத்துக்கு எல்லையே இல்லை
பெற்றோர் - என் வாழ்வின் வேராய்
என்றும் என் இருதயத்தின் தேவராய்

கவிஞர் தீபிராஜா டிரோன், ஜப்பான்

# வடிவாய் வந்த விடியலே



கதிரவன் ஒளியினிலே
கனிவான மனங்கள்
கானமிசைக்கும் இணைகளின்
காதல் இராகங்களே

கிளிஞ்சல்களின் ஓசைதனில்
கிளுகிளுப்பாகும் தேகங்களே
கீழ்வானம் சிவந்திட
கீச்சிடும் புள்ளினங்களே

குமரியின் நேசத்திலே
குதூகலம் பிறந்திடுமே
கூவிடும் குயிலாய்
கூட்டுக்குள் ஆனந்தமே

கெண்டைமீன் விழிகளால்
கொஞ்சிடும் பைங்கிளியாள்
கேளிக்கை விருந்தாய்
கைகளும் இணைந்ததே

வஞ்சனையில்லா வடிவாய்
வந்த விடியலே
வனப்பினில் வசமானேன்
வஞ்சியிடம் வாஞ்சையானேன்

வாடாமலராய் வந்திட
வாழ்வும் வசந்தமானதே
மதியும் மயங்கிட
மங்கையும் மலர்ந்தாளே

இதயம் இனித்திடவே
இசைவானது எண்ணமே
உள்ளத்தின் உணர்விலே
உறவான உயிரே

ஊடலில்லாக் காதலும்
ஊஞ்சலாய் ஆனதிங்கே
தடாகத்துத் தாமரையாய்
தழுவிடுவாய் என்னவளே

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# என்னவ(ன்)

நான் காணாத உலகமடா நீ
நான் வேண்டாத சாமியடா நீ
நான் கற்றாத பாடமடா நீ
நான் சேராத காதலடா நீ
நான் பிடிக்க நினைக்கும் கரமடா நீ
என் தேடலும் மோதலும் நீயே நீயே!

கவிஞர் மோனீஷா, தி. மலை

# மரம்

பூமித்தாயின்
கருவில் பிறந்தவள்.

பஞ்சபூதங்களின் அம்சம்
கொண்டு வளர்ந்தவள்.

இயற்கையின்
ஆதாரமாய் இருப்பவள்.

தியாகத்தின்
அர்த்தமாய் விளங்குபவள்

மனித நீ என்னை அழித்தாய்
உன்னை பழி தீர்க்க நான் மனிதன் அல்ல.

"மரம்"

கவிஞர் சுரேஷ் குமார், சென்னை

# துக்கம் மறந்த தூக்கம்

துக்கம் மறந்துத்
தூக்கம் காணும்
இன்ப வாழ்க்கையில்
எல்லையற்ற மகிழ்ச்சியாக.

நெஞ்சம் முழுக்க
நேர்மையின் நிர்வாகம்.
காலமெல்லாம் நேசிக்கும்
காதல்மனையாளின் புன்னகை.

வெற்றிக்கான சின்னமான
உழைப்பின் உன்னதத்தில்
வெறி கொண்ட
உச்சத்தின் சாளரங்கள்.

மயக்கம் மறந்த
மமதைகள் களைந்தே.
போதைகளில்லா நாட்களுக்கான
புதியன புலர்ந்திட.

பிறந்த கெட்ட
பிறழ்வுகள் தொலைந்திட.
பின்னால் தொடரும்
பிழைகள் இன்றியே.

பகிர்ந்தளிக்க கொடை
எண்ணங்களும் தர்ம
சிந்தைகள் அருவியாக
இன்பம் முகிழ்க்கும்.

துக்கம் துறக்கும்
தூக்கமும் துறைமுகமாகும்
எண்ணக் கப்பல்கள்
எழில் ஓட்டத்தோடே.

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# மழலை

**எண்சீர் மண்டிலம்**
**புளிமா+தேமா+காய்+விளம்**



அசையும் செல்லம்
அன்பாக அழைக்குமே
அமுதம் சொட்ட
ஆவெனவே பாடுமே.

நசைந்தே ஒச்சி
நயமுடனே ஆடுமே
நகைத்தே கொஞ்சி
நலிவினையே போக்குமே.

பசையாய் ஒட்டி
பாந்தமாக சாயுமே
பசித்த நேரம் பாடாக படுத்துமே.

வசைக்கச் செய்யும்
வாதனையும் தந்திடும்
வலிமை முத்தம்
வக்கணையாய் ஈயுமே.

கவிஞர் செ. கலைவாணி

# உள்ளம் கொள்ளைப் போகுதே

என்னவளே எனக்காக பிறந்த ஆருயிரே
உன் கள்ளமில்லா புன்னகையை இரசிக்க
கண்கள் காதல் மொழி பேச
உன்னைக் காணாத நொடியில்
என் இதயம் படபடக்க என்னவென்றுச் சொல்ல
பாவடை தாவணியில் அழகடி செல்லமே
மாமா நெனப்பு உன்னை இழுக்க
தூரத்தில் இருந்தாலும் தூது சொல்வேனடி
அருகில் இருந்தால் அரவணைத்து முத்தம்
மழை பொழிவேனடி கண்ணே கண்மணியே



கவிஞர் ம. செ. அ. பாமிலா பேகம், நாகர்கோவில்

வாராத கனவுகளில்
வாழ்ந்தென்ன பயன்
அவளைப் பார்க்கவேண்டும்
*

வாழ்க்கை தந்தவளுக்கு
வாழும் வரை கவிதையாய்
வார்த்தை நீராட்டு விழா



கவிஞர் இளையவன் சிவா



அகர முதல

மனதிற்குள் பேசும் விஷயங்களை
முனகி தொலைக்காதீர்கள்
மனிதருக்கு மனிதர் புரிதல் வேறுபடும்
***

சோமநாதபுர சிலையே
சொக்கிடும் கலையே
வா
***

நிழல்கள்
உன்னுடையவை அல்ல
அவை வெளிச்சத்தின் சொந்தங்கள்
***

நான் இறந்த பின் என்னை புகள்பவரை
சும்மா விட போவதில்லை.
இத்தனை வருடம் என்ன செய்தாய் ?
***

குழந்தைகளுடன் விளையாடுகையில்
மினரல் வாட்டர் போன்றதொரு
மனநிலை
***

சிறு வயது பழக்கம்
படம் பார்த்து கதை சொல்லும்
சினிமா விமர்சகர்கள்
***

குருவி கூட்டு தீனியை
திருடியுண்ணவும்
தயங்கா மனிதன்
***

மரத்திலும்
மனதிலும்
ஒரு குரங்கு
***

வாசிப்புகள் தான்
எழுத்தாளனுக்கு
வாழ்த்துக்கள்
***

திறந்து வைத்த புத்தக வாடை
எங்கோ வருகிறது
பாவம் யாரோ படித்து முடிக்காமல்
பாதியில் விட்டுள்ளனர்
***

பார்ப்பவருக்கு
பதில் சொல்லி மால்வதே
பெண் நட்பின் சிக்கல்
***

சரியோ தவறோ
அவனுடன் நான்,
நண்பனிடம் நியாயம் பேச விருப்பமில்லை.

கவிஞர் சிரஞ்சீவி இராஜமோகன், கும்பகோணம்

# தீர்மானித்து விட்டாயா?

அத்தியாயம்-9
புதினம்

தாராவிக்கு வந்த போது இருட்டி விட்டது. உள்ளுக்குள்ளே மெல்ல பயம் வந்தது. பசிக்க ஆரம்பித்தது. நண்பர் ஒருவர் வைத்திருந்த பிரிண்டிங் பிரஸ். அந்த இடத்தில் அச்சகம் இல்லாததால், அருகிலிருந்த 'பான்' கடையில் "இங்கே பிரஸ் வைத்திருந்த வில்சன் எங்கே இருக்கிறார் தெரியுமா?" என்று கேட்டான். "அது... அவர் பிரஸை மூடி தான் ஆறுமாதமாகி விட்டதே. நீங்கள் பக்கத்து வீட்டில் கேட்டுப் பருங்களேன்" என்றார் கடைக்காரர்.



''கடையைத்தாண்டி பக்கத்து வீட்டு வாசலில் இருந்த மூதாட்டியிடம் விசாரித்த போது, அடுத்த கல்லி( சிறிய முடுக்கு) யிலே மூணாவது வீட்டிலே இருக்கிறார்" என்றார். அந்த வீட்டில் கதவைத் தட்டியபோது ''யாரு.....'' வில்சன் வெளியே போயிருக்காங்க. நீங்க யாரு? உள்ளே வாங்களேன்'' என்றாள் வில்சனின் மனைவி திவ்யா. உள்ளே போகவா வேண்டாமா? எனது தீர்மானிக்க முடியாமல், "நான் வந்ததாகச் சொல்லுக்கள்.'' என்றான். ''உங்கள் பேர்?''

''அரசு வசாயிலிருந்து வந்திருந்தார் என்று சொல்லுங்கள்." அவன் கிளம்ப எத்தனித்த போது வசாயிலிருந்து வந்திருக்கிறீர்கள் இருங்கள். இப்போது வந்து விடுவார்கள். மொபைல் போனைக் கூட வீட்டிலே வைத்து விட்டுப் போயிருக்கிறார்கள். இல்லையென்றால் மொபைலிலேயாவது கூப்பிட்டு விடலாம் என்றாள்." திவ்யா. "பரவாயில்லீங்க, நான் அப்புறமாக வருகிறேன்." என்று சொல்லி விட்டு திரும்பவும் தொண்ணூறு அடிச்சாலைக்கு வந்த போது அவனை யாரோ தொடர்வது போல அவனுடைய பிடரியில் உணர்ந்தான்.

உடனடியாகத் திரும்பிப் பார்க்காமல் மெதுவாக அருகிலிருந்த பெட்டிக் கடைக்கு வந்து ஒரு டிரிபிள் வைவ் சிகரெட் கொடுங்கள் என்று சொல்லி விட்டு தற்செயலாக 'பின்னால் யாராவது நிற்கிறார்களா' என்று திரும்பிப்பார்த்தான். கொஞ்சம் தள்ளி கையில் சிகரெட் மினுங்க பாபு சிரித்துக் கொண்டு நின்றார்.

அரசுக்கு ஆச்சரியமாக இருந்தது. 'அப்பாவின் ஆத்ம நண்பர் என்னைத் தொடர்கிறாரா? அப்பாவின் எந்தச் செயலுக்கும் பக்க பலமாக நிற்கும் பாபு என்னைத் தொடர்கிறார் என்றால்...' அவனுக்குள் சிலிர்த்தது.

கவிஞர் இரஜகை நிலவன்

# முகவரி தேடும் காற்று

## தீர்மானித்து விட்டாயா?

## அத்தியாயம்-9

## புதினம்

நான்... அப்பாவின் அடையாளங்களிலிருந்து தப்ப வேண்டுமெனில் என் இருப்பிடம் அவர்களுக்குத் தெரியக் கூடாது.
சிகரெட்டை வாங்கியவன் பற்ற வைக்காமல் திரும்ப பையில் போட்டுக் கொண்டு வேகமாக அடுத்தடுத்தக் கல்லிகளுக்குள் (சிறிய முடுக்குத்தெருக்கள்) நுழைந்து தொடர்பவர் தன்னை பார்க்கும் முன்னரே அடுத்தடுத்தக் கல்லிக்குள்(சிறிய முடுக்குத்தெருக்கள்) நுழைந்து பாந்திரா குர்லா லிங்க் ரோட்டிற்கு வந்து 'ஆட்டோ' என்று கைத்தட்டி கூப்பிட்டு ஏறி அமர்ந்து " சுன்னா பட்டி ஜாவ்..." என்றான்.

திரும்பப் பார்த்து யாரும் தொடராததால் ஆட்டோ டிரைவரிடம் தீப்பெட்டி வாங்கி சிகரெட் பற்ற வைத்துக் கொண்டு "சுன்னாப்பட்டி ஸ்டேஷன் தாண்டி ஒரு சிக்னல் வருமே அதிலே இறங்கி விடு "என்றான்.

சுன்னாப்பட்டி வந்ததும் இறங்கி அங்கிருந்து "சாய் பாலாஜி" பில்டிங் தேடி மூன்றாவது மாடி ஏறி அறை எண் 301 ல் மணி அடித்தபோது... "கோன்..."? என்ற சப்தத்தோடு கதவை திறந்த கிருஷ்ணன் "ஹே! என்னாச்சரியம்!! அரசு எங்க வீட்டிற்கு வந்திருக்கிறான். வா....வா..." என்றான்.

"நண்பர்கள் எல்லோரும் எங்கே?" ''அரோராவில் விஜயின் திருப்பாச்சி, படம்பார்க்கப் போயிருக்காங்க. வா.. உள்ளே வாப்பா... என்ன சாப்பிடுகிறாய்? இது பாச்சிலர்ஸ் ரூம்... அப்படி இப்படித் தானிருக்கும்" என்று கீழே கிடந்த டெபோனைர் புத்தகத்தை எடுத்து ஒளித்து வைத்து விட்டு நாற்காலியில் கிடந்த ஜட்டி, பனியனை எடுத்து விட்டு அவனை அமரச்சொன்னான்.

தமிழரசு ஏதோ ஒரு உணர்வில் ஜன்னல் வழியாக எட்டிப் பர்த்தப்போது ரோட்டில் பாபு "அரசு இங்கே சுன்னாப்பட்டியில் நண்பர்கள் அறையில் இருக்கிறார். ஒன்றும் பிரச்சினையில்லை" என்று போன் பண்ணிக்கொண்டிருந்தார்.

பெரும்மூச்சு விட்ட தமிழரசு "கிருஷ்ணா இந்தப் பில்டிங்கிலேயிருந்து வெளியே போவதற்கு வேறே வழியிருக்கிறதா?" என்று கேட்டான்.

"பின்னாலே வழியிருக்கிறது. அந்த வழியிலே போகலாம். என்ன விஷயம்"? என்று கேட்டான் கிருஷ்ணா. "அப்புறம் சொல்கிறேன்." என்று கிளம்பிய அரசு, பின் வழியாக வெளியே வந்து ஆட்டோ பிடித்து "பாந்திரா போப்பா" என்றான். பாந்திரா மே... கிதர் ஜானேகா?" என்றான் ஆட்டோகாரன். "ரயில்வே ஸ்டேஷன்" என்றான் அரசு.

தொடரும்...

கவிஞர் இரஜகை நிலவன்

## நூல் அனுபவம்

ஒரு நல்ல கவிஞர் "இரஜகை நிலவன்" ஒரு நல்ல கவிஞர் என்று அறிவேன்

இன்பம் பயந்து இனிமை சொரிந்து துன்பம் விலக்கி தூய்மை வளர்த்து அன்பைப் பெருக்கி அளவிற்பெருகி இன்பமாய் எழுந்துள்ள, இந்த "பறி போனதா நெஞ்சம்.!?" (புதுக்கவிதைகளின் பூங்கொத்து) ''புத்தகம் ஒரு சிறந்த படைப்பு.

தேடலின் ஆதாரம் ஆசைகளின் அடிவாரம்.




தமிழ்மகள்வாசுகி, பத்திரிகையாளர், பெங்களூர்

# பாஷோவின் கைத்தடி

## நூல் அனுபவம்

## ஹைக்கூக்கள் ஒரு பார்வை

படைப்பாளி : கவிஞர் ச. இராஜ்குமார் 8867933021
வெளியீடு : செங்கனி பதிப்பகம் புதுகை,9750858600

ஹைக்கூ என்றால் தமிழ்க் கவிஞர்களுக்கு பாஷோவின் நினைவு வரும். பாஷோவை வைத்தே பல ஹைக்கூக்கள் எழுதப்பட்டுள்ளன. தொகுப்புகளும் வந்துள்ளன.

அமைதியான குளத்தில்
இப்போதும் கூட
பாஷோவின் தவளை
என்பது கவிஞர் சிபியின் ஹைக்கூ.

பாஷோ பூஸா இஸன்
மூவரும் தனித்தனி இல்லை
இதோ நான் இருக்கிறேன் ஒரே ஹைக்கூவாக
என்று கவிஞர் பாரதி வசந்தன் ஒரு ஹைக்கூ எழுதினார். பாஷோவின் ஜென் கவிதைகள் என்னும் தலைப்பில் ஒரு தொகுப்பை எழுதினார் எஸ். ராமகிருஷ்ணன். பாஷோவின் கடைசி ஹைக்கூ என்னும் ஒரு ஹைக்கூத் தொகுப்பை இருமொழிகளில் தந்துள்ளார் கவிஞர் கே. பாபுசசிதரன். கவிஞர் ச. இராஜ்குமார் பாஷோவின் கைத்தடி என்னும் ஹைக்கூத் தொகுப்பைத் தந்துள்ளார்.

உதிர்ந்த சருகுகள்
படபடக்கிறது
இளம் பறவையின் சிறகு
என்னும் படபடப்புடன் தொகுப்பைத் தொடங்கியுள்ளார் கவிஞர் ச. இராஜ்குமார். சிறகு போல் கற்பனையும் விரிகிறது. சருகு உதிர்ந்த அதிர்வால் ஏற்கனவே உதிர்ந்த இளம் பறவையின் சிறகு படபடக்கிறது என்கிறார். சருகை விட சிறகு மென்மையானது என்பதைக் குறிப்பிடுகிறார்.

புயல் வந்து ஓய்ந்த பின் பார்த்தால் வாழை மரங்கள் எல்லாம் ஒரு பக்கமாக சாய்ந்து கிடக்கும். பயிர்கள் சிலவும் ஒரு பக்கமாகவே சாய்ந்திருக்கும். பொதுவாக பார்ப்பவர்கள் புயல் அடித்து ஓய்ந்துள்ளது என்பர்.

திரு பொன். குமார்

புயல் சென்ற
திசையைக் காட்டுகின்றன
சரிந்த வாழை மரங்கள்

என புயலின் திசையைக் காட்டுகிறார். புயல் எந்த பக்கமாக வீசியது என்பதை வாழை மரங்கள் சாய்ந்துள்ளதை வைத்து தெரிந்து கொள்ளலாம் என்கிறார். வழிகாட்டி மரங்கள் போல வாழை மரங்கள் உள்ளன என்கிறார்.

தொடர்வண்டிப் பயணம் ஓர் அனுபவம். தொடர் வண்டியில் தேநீரைப் பருகுவது மற்றோர் அனுபவம். சிந்தாமல் சிதறாமல் பருக முடியாது. தொடர் வண்டியில் பயணித்தல் தாலாட்டுவது போலிருக்கும்.

தொடர்வண்டிப் பயணம்
நெரிசலில் சிதறும்
தேநீருடன் வார்த்தைகள்

என்னும் ஹைக்கூவில் தேநீருடன் வார்த்தைகளும் சிதறும் என்கிறார். ஹைக்கூவில் வார்த்தைகள் சிதறாமல் உள்ளது. கவிஞரின் அனுபவம் தெரிகிறது.

அரவமற்ற இரவில் ஒரு சிறிய சப்தமும் கனமாக ஒலிக்கும். கதவை சாத்தினாலும் சத்தம் கேட்கவே செய்யும்.

நடுநிசி இரவு
யாரோ கதவை சாத்த
கசிகிறது நசுங்கிய ஓசை

என்னும் ஹைக்கூவில் கதவை சாத்த கசிகிறது ஓசை என வித்தியாசமாக தெரிவித்துள்ளார். ஓசை கசிந்தாலும் மெல்ல ஒலிக்கும் என்கிறார்.

இரவில் சாலைப் பயணம்
திணறடிக்கச் செய்கின்றன
வாகனங்களின் ஒளிசிதறல்கள்

என்னும் ஹைக்கூ காட்சியாக கண்முன் விரிகின்றன. இரவு நேரத்தில் பயணிக்கும் போது எதிரில் வரும் வாகனங்களின் ஒளி கண்ணை பறிக்கும். பாதையில் வாகனம் செலுத்த முடியாமல் திணறடிக்கும். ஒளிசிதறல்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

திரு பொன். குமார்

## நூல் அனுபவம்

## ஹைக்கூக்கள் ஒரு பார்வை

பூமியில் விதைக்கப்பட்ட விதை முளைவிடும் போது பூமியில் ஒரு சிறு பிளவு ஏற்படும். இது இயற்கை.

துளிர்விடும் விதை
சிறு விரிசல் கண்டது
பூமி

என்னும் ஹைக்கூவில் மேற்படி நிகழ்வை இயல்பாகவே பதிவுச் செய்துள்ளார். வாசக நெஞ்சிலும் பதிவித்துள்ளார்.

நீரோடையில் கூழாங்கற்கள் காணப்படும். கூழாங்கற்கள் உருவானவையா உருவாக்கப்படுபவையா என்பது ஒரு கேள்விக்குறி.

நீரோடையில் சலசலப்பு
உருவம் பெறுகின்றன
கூழாங்கற்கள்

என்னும் ஹைக்கூவில் கூழாங்கற்களை நீரோட்டமே உருவாக்குகிறது என்கிறார். கல்லின் மீது நீர் பாய பாய கற்களில் ஒரு வழவழப்பு தன்மை உண்டாகும். சொற்களில் ஒரு வழவழப்பு தன்மை உண்டாகிறது என்று உணர்த்தியுள்ளார்.

சாரல் மழை
மெதுவாகக் கரைகிறது
கரையான் புற்று

என்னும் ஹைக்கூ வாசித்தவுடன் மனதும் மெல்ல கரைகிறது. கரையான் எத்தனை காலம் கஷ்ட பட்டு கட்டியிருக்கும். பெய்யும் சாரல் மழை மெல்ல கரைத்துக்கொண்டிருக்கிறது என்கிறார். சாரல் மழைக்கு கருணை இல்லையா..?

பனை மரம் மனிதருக்கு பலவகைகளில் பயன் தரும். நுனி முதல் அடி வரை பயன்படும். வெட்டினாலும் பயன் தராமல் இராது.

வெட்டிய பனைமரம்
உயர்ந்து நிற்கிறது
கோயிலில் கொடிமரமாக

என்னும் ஹைக்கூவில் வெட்டிய பின்னும் கொடிமரமாக நின்று கும்பிட வைக்கிறது என்கிறார். மரம் என்றால் வணக்கத்திற்குரியது என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும்.

திரு பொன். குமார்

## நூல் அனுபவம்

## ஹைக்கூக்கள் ஒரு பார்வை

உதிரும் கடைசி இலையின்
பயணத்தையும் தீர்மானிக்கிறது
காற்று

என்றொரு ஹைக்கூ. உதிர்ந்தாலும் காற்று இலையை விடுவதில்லை என்கிறார். இலையின் பயணத்தையும் காற்றே தீர்மானிக்கிறது என்று பயணத்தைத் தொடர்ந்துள்ளார். மரம் சும்மா இருந்தாலும் காற்று விடுவதில்லை என்று திரு மந்திரத்தில் கூறப்பட்ட பழ மொழியை நினைவுப்படுத்துகிறது.

மழை பெய்து முடிந்தாலும் மலையின் ஒருபுறம் மழைநீர் வழிந்து கொண்டே இருக்கும். நீர் வடிவது நின்றாலும் நீர் வழிந்த தாரை இருக்கும். தடம் தெரியும். கவிஞர் இதை

உயர்ந்த மலைப்பாறை
நன்றாகத் தெரிகிறது
நீர் வழிந்த தடம்

என்னும் ஹைக்கூவாக்கியுள்ளார். நீர் வழிந்த தடம் நிரந்தரமாக இருக்கும். ஹைக்கூவும் நினைவில் நிற்கும்.

செடியைப் பிடுங்க
மௌனமாய் உதிர்கிறது
வேரிலிருந்து மண்

என்னும் ஹைக்கூ செடிக்கும் மண்ணுக்குமான உறவைப்பற்றி பேசுகிறது. பூமியிலிருந்து செடி பிடுங்கப்பட்டாலும் வேரிலிருந்து மண்ணை பிரிக்க முடியாது. மௌனமாய் உதிர்ந்தாலும் வேரில் மண் ஒட்டிக் கொண்டே இருக்கும்.

மீனை பிடிக்க கரை மீது காத்திருக்கும் கொக்கு. கொக்கிடம் இருந்து தப்பிக்க கடலின் ஆழம் வரை செல்கின்றன மீன்கள். கொக்கும் பசியாற வேண்டும். மீனும் உயிர்வாழ வேண்டும். கவிஞர்

இரைப் பிடிக்கும் கொக்கு
கடலின் ஆழத்தை அறிந்திருக்கின்றன
மீன்கள்

என்னும் ஹைக்கூவில் இரண்டுக்கும் இரங்கியுள்ளார். கடலின் ஆழத்தை அறிந்திருப்பதால்தான் மீன்கள் கொக்கிடம் இருந்து தப்பித்து வாழ்கின்றன. இருப்பினும் கொக்கிடம் சிக்கி இரையாகி விடுகின்றன சில மீன்கள்.

திரு பொன். குமார்

தேரடி வீதி
உடைந்த நடைவண்டியுடன்
நடைப்பயிலும் குழந்தை

என்பது நெகிழ்ச்சியானது. உடைந்த நடைவண்டியுடன் நடைப்பயின்றது என்னும் வரியை வாசித்தவுடன் மனம் உடைந்து விடுகிறது. நடைப்பயிலவும் ஒரு நல்ல வண்டி இல்லாத நிலையில் குழந்தைகள் வறுமையில் இருப்பது வருத்தமளிக்கிறது.

கொம்புகள் என்பது விலங்குகளுக்கு பாதுகாப்பானது. மாட்டுக்கும் கொம்பு உண்டு. மானுக்கும் கொம்பு உண்டு. மானுக்கு முளைக்கும் கொம்புகள் கிளை கிளையாய் வளரும். அது மானுக்கே ஆபத்தானது.

முள் காட்டில் மேயும் மான்
இடையூறாக இருக்கும்
வளைந்த பெரிய கொம்புகள்

என்கிறார். மேயும் போது முள்ளில் மாட்டிக்கொள்கிறது என்கிறார். மான்களே ஒன்றுக்கொன்று மாட்டிக் கொள்ளும் ஆபத்தும் உண்டு.

பறவைகள் மரத்தில் விளையும் பழங்களை தின்று வளர்கின்றன. எச்சங்களை இட்டு மரங்களையும் வளர்க்கின்றனர். பழங்களைத் தின்னவே பறவைகள் வருகிறது என்பது பொது புத்தி. ஆனால் கவிஞர்

பழங்களை உண்ண
வந்த பறவைகள்
கொத்திகொண்டிருக்கின்றன பூச்சிகளை

என்னும் ஹைக்கூவில் பறவைகள் பழங்களை மட்டும் தின்னவரவில்லை மரத்திலிருக்கும் பூச்சிகளையும் தின்ன வருகிறது என்கிறார்.

காடுகளை பாகம் பிரிக்கும் போது வரப்பில் இருக்கும் மரம் யாருக்கு என்று ஒரு கேள்வி எழும். அதனால் சிலவேளைகள் மரத்தை வெட்டிவிடுவார்கள். வெட்டப்படாமலும் விட்டு விடுவார்கள்.

பாகப்பிரிவினை
இருபுறமும் கிளை விரிக்கிறது
வரப்பில் வைத்த மரம்

திரு பொன். குமார்

என வரப்பில் மரம் இருந்தால் இருபுறமும் கிளை விரிக்கும் என்கிறார். மரம் பொதுவாக இருக்கும். மனிதர் பொதுவாக இல்லை என்றும் ஹைக்கூ உணர்த்துகிறது.

மதிய உணவு இடைவேளை
பள்ளி வளாகத்தில் கூடுகின்றன

என்று முதல் இரண்டு அடிகளில் ஓர் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளார். எவை கூடுகின்றன, ஏன் கூடுகின்றன என்று கேள்விகளை எழுப்பியுள்ளார்.

காக்கைகள்

என மூன்றாமடியை எழுதி ஒரு காட்சியைக் காட்டுகிறார். உணவு வேளையில் மாணவர்கள் சாப்பிடும் போது உணவுகள் சிந்தும். சிதறும். அதை உண்பதற்காக காக்கைகள் கூடுகின்றன என்று கூறியுள்ளார்.

உதிக்கும் சூரியனை
ஒருகணம் மறைத்துச் செல்கிறது
கிழக்கே செல்லும் பறவை

என்பது ஓர் அருமையான ஹைக்கூ. ஒரு கணம் என்பதே கவிதையின் கனத்தைக் கூட்டுகிறது. ஒரு மின்னல் போல ஹைக்கூ மனத்தில் பாய்கிறது.

விறகு விற்றவள்
மாலையில் சுமந்து வருகிறாள்
மஞ்சள் வெயிலை

என்பதும் சிறப்பு. இதுவும் ஒரு ஹைக்கூ பார்வை.

உச்சி வெயில்
இடுப்பில் சுமக்கிறாள்
குடத்தில் சூரியன்

என்னும் பொன். குமாரின் ஹைக்கூவை நினைவுப்படுத்தியது.

ஆலமரத்தின் சிறப்பு அதன் விழுதுகள். விழுதுகள் கவிஞரின் கண்ணுக்கு கூந்தலாக தெரிவதால் கவிஞர் எழுதிய ஹைக்கூ

தலைவாரிப் பின்னி முடிக்க
கரங்கள் இல்லை
விழுதுகளுடன் ஆலமரம்

ஆலமரத்தை தலைவாரிப் பின்ன முடியுமா? பின்ன முடியும் அதற்கான கரங்கள் இல்லை என்கிறார்.

திரு பொன். குமார்

தவளை
தண்ணீருக்குள் தாவ
தடுமாறியது நிலா
என்பது கவிஞர் ராசி. பன்னீர்செல்வம் அவர்களின் ஹைக்கூ.

மீனின் சலசலப்பு
உறங்கவில்லை
குளத்தில் நிலா
என்பது கவிஞர் ச. இராஜ்குமார் அவர்களின் ஹைக்கூ. இராசி. பன்னீர்செல்வத்தின் தவளை இராஜ்குமாரின் மீனாகியுள்ளது.

தும்பி ஒரு சிறிய உயிர். சிறு ஜீவன். தும்பியைக் கையில் பிடித்தால் அது படபடக்கும். கவிஞர்
தும்பியை பிடிக்கும்
சிறுவனின் கைகள்
படபடக்கிறது இதயம்
என சிறுவனின் இதயத்தைக் குறிப்பிடுகிறார். தும்பிக்காக கவிஞர் இரக்கப்பட்டுள்ளார்.

கவிஞர் ச. இராஜ்குமாரின் ஹைக்கூ முயற்சி வித்தியாசமானது. வரவேற்பிற்குரியது. மென்மையானது. மனத்தை வருடக்கூடியது. இயற்கையைச் சார்ந்தே ஏராளமான ஹைக்கூக்கள் எழுதியுள்ளார். பூமிப் பரப்பில் கவிஞர் கண்ணுற்றதை எல்லாம் ஹைக்கூவாக்கியுள்ளார். காண்பவைகளைக் கூர்ந்து கவனிப்பவர் என்பதையை ஹைக்கூக்கள் காட்டுகின்றன. பாடுபொருள்களில் பழையதிருப்பினும் பாடிய விதம் கவிஞர் ச. இராஜ்குமாரை தனித்து காட்டுகின்றது. ஹைக்கூ உலகில் கவிஞருக்கு ஒரு தனி இடம் பாஷோவின் கைத்தடி பெற்றுத் தரும். ஹைக்கூவில் கவிஞர் நா. விச்வநாதனின் பார்வை வேறு. கவிஞர் மு. முருகேஷின் பார்வை வேறு. இருவரின் பார்வையும் இராஜ்குமார் மீது ஒரே மாதிரியாக இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. ச. இராஜ்குமார் ஒரு ஹைக்கூவாளர் என்பதை உறுதிப்படுத்துகிறது.
ஹைக்கூவிற்கு
ஊன்றுகோலாக உள்ளது
பாஷோவின் கைத்தடி.

திரு பொன். குமார்

# கவிக்கோ அப்துல் ரகுமான்

கட்டுரை

**பிறப்பு:**



அனைவராலும் கவிக்கோ என்று அறியப்படும் அப்துல் ரகுமான் மஹி என்னும் சையத் அகமது ஜீனத் பேகம் இளையோருக்கு 1937 நவம்பர் 9 அன்று மதுரை கிழக்கு சந்தைப்பேட்டையில் பிறந்தார் இவருக்கு அருள்வண்ணன் என்ற புனைப்பெயரும் உண்டு.

**கல்வியும் பணியும்:**

அப்துல் ரஹ்மான் தனது தொடக்கக் கல்வியும் உயர்நிலைப் பள்ளிக் பள்ளிக் கல்வியையும் மதுரையில் உள்ள பள்ளிகளில் பெற்றார் பின்னர் மதுரை தியாகராசர் அக்கல்லூரியில் சேர்ந்து இடைநிலை வகுப்பில் தேறினார் தொடர்ந்து கல்லூரியில் இளங்கலை முதுகலைப் பட்டங்களைப் பெற்றார்.

அப்பொழுது முனைவர் மா. இராசமாணிக்கனார், ஔவை துரைசாமி,பரந்தாமனார்,ஔவை நடராசன்,பரமசிவானந்தம் அறிஞர்களிடம் தமிழ் பயின்றார்.

"உன் சாவில் சாம்பலை அல்ல
நெருப்பை விட்டுச்செல்" -கவிக்கோ

சென்னை தரமணியில் அமைந்துள்ள உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் அதன் இயக்குனராக பணியாற்றிய ச.வே .சுப்பிரமணியத்தை வழிகாட்டியாகக் கொண்டு புதுக்கவிதையில் குறியீடு என்னும் தலைப்பில் ஆய்வு செய்து சென்னை பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றார்.

தமிழில் முதுகலைப் பட்டம் பெற்றதும் தியாகராசர் நடத்திய தமிழ்நாடு என்னும் நாளிதழில் மெய்ப்பு திருத்துனராக சில காலம் பணியாற்றினார்.

திரு பொன். குமார்

இஸ்லாமிய கல்லூரியில் பணியாற்ற அவருக்கு 1961 ஆம் ஆண்டில் வாய்ப்பு கிடைத்தது அங்கே சிற்றுறையாளர், வரியுரையாளர்,பேருரையாளர், பேராசிரியர் என படிப்படியாக உயர்ந்து
1991 ஆம் ஆண்டில் விருப்ப ஆண்டில் விருப்ப ஓய்வு பெற்றார். அதில் 20 ஆண்டுகள் தமிழ் துறையின் தலைவராக பணியாற்றினார்.


தமிழ்நாடு வக்பு வாரிய தலைவராக 2009 மே முதல் 2011 வரை பணியாற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது

## படைப்புகளும் விருதுகளும்:

கவிஞர் அப்துல் ரகுமானின் கடந்த 1999-ஆம் ஆண்டு ’ஆலாபனை’ கவிதை நூலுக்கு சாகித்ய அகாதமி விருது வழங்கப்பட்டது. மேலும் இவர் தமிழன்னை விருது, பாரதிதாசன் விருது, கலைமாமணி விருது, கம்பர் விருது, கலைஞர் விருது, சி.பா.ஆதித்தனார் இலக்கியப் பரிசு உள்பட பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ளார்.

பித்தன் என்ற நூலிலிருந்து:

"சட்டையை ஏன்
கிழிக்கிறாய்...?என்றேன்.
அதற்க்கு பித்தன் சொன்ன பதில்-
கடிதத்தைப்
படிக்க வேண்டும் என்றால்
உறையைக்
கிழிக்கத்தானே வோண்டும்."   -கவிக்கோ




’பால்வீதி’, ’நேயர் விருப்பம்’, ’தேவகானம்’, ’முத்தமிழின் முகவரி’, ’விதைபோல் விழுந்தவர்’, ’பாலை நிலா’ உள்ளிட்ட கவிதை நூல்களையும், ’கரைகளே நதியாவதில்லை’, ’அவளுக்கு நிலா என்று பெயர்’, ’முட்டைவாசிகள்’, ’தொலைபேசிக் கண்ணீர்’, ’உறங்கும் அழகி’,

திரு.குமரி.தர்மசீலன்; இதழாசிரியர்

'காக்கைச்சோறு', 'இது சிறகுகளின் நேரம்', 'எம்மொழி செம்மொழி' போன்ற பல்வேறு கட்டுரைகளையும் எழுதியுள்ளார். 'கம்பனில் அரசியல் கோட்பாடு' என்ற ஆய்வு நூலையும் படைத்துள்ளார். ஹைக்கூ, கஜல் உள்ளிட்ட பிறமொழி இலக்கியங்களை தமிழில் புனைந்திருக்கிறார்.

"கஸல்"

"இந்த பனித்துளிகள்
இரவு யாருக்காவோ
அழுதிருக்கின்றன
என்னைப் போலவே...!" -கவிக்கோ

**ஆலாபனை:**

இழந்தவர்கள்' என்ற கவிதையில் 'குளிர் காய சுள்ளி பொறுக்கத் தொடங்கினாய், சுள்ளி பொறுக்குவதிலேயே உன் ஆயுள் செலவாகிக் கொண்டிருக்கிறது, நீ குளிர் காய்வதே இல்லை' என மனித வாழ்கையின் வெற்று ஓட்டத்தைப் பற்றி குறிப்பிடுகிறார். 'ஆறாத அறிவு' என்ற கவிதையில், அதன் தலைபிலேயே மனிதனின் ஆறாவது அறிவே அவனின் ரணம் என்பதை குறிப்பிட்டுவிடுகிறார்.

உயிரினங்களில் மனிதன் மட்டும்தான் கவலைப்படுகிறான். ஆறாவது அறிவு என்பது அவன் சுமக்கும் சிலுவையா? என வினவுகிறார். 'மானுடத்தின் திருவிழா' என்ற கவிதையில், மனிதன் பல்வேறு வரையரைகளால் கட்டப்பட்டிருப்பதாகக் கூறுகிரார். இலக்கணத்திற்கு அப்பால் இருக்கிறது அழகு என்கிறார். 'வெற்றி' என்ற கவிதையில், தோல்வியைக் கொண்டாடுகிறார். தோல்வியே! நீதான் நாம் சம்பாதிக்கும் பணம், வெற்றியைக் கூட அதனால் வாங்க முடியும் என்கிறார். 'அதுதான்' என்ற கவிதையில், கடைசிப் பக்கங்கள் கிழிந்து போன துப்பறியும் நவீனத்தைத் தெரியாமல் எடுத்துப் படித்திருக்கிறீர்களா? அதுதான் வாழ்க்கை என்கிறார். நதி நீரின்றி வறண்டு கிடந்தாலும் நதி என்றே அழைக்கப்படுவதை அறிந்திருக்கிறீர்களா? என்கிறார்

திரு. குமார் தர்மசீலன், இதழாசிரியர்

கட்டுரை

"பத்துபேர் பதினைந்துபேர் என்று கூடி அமர்ந்து கவியரங்கங்கள் நடத்திய நிலை மாறி என் தலைமையில் அப்துல் ரஹ்மான் போன்றவர்கள் கலந்து கொண்ட கவியரங்கங்கள் ஆயிரக்கணக்கான மக்கள் மத்தியில் நடக்கத் தொடங்கிய அந்த காலகட்டத்தை வரலாறுதான் கண்களை விரித்து பார்த்து கொண்டுதான் இருக்கிறது"

-மு.கருணாநிதி

அப்துல் ரகுமான் விட்டுச்சென்ற நெருப்பு சுண்டி போகாத

சூரிய நெருப்பு
அது சுவாசத்தில் எரியும்
அக்கினி காலத்தின்
மூலங்களை கடந்து
கொண்டே இருக்கும்...! -வைரமுத்து

இறப்பு:

தனது 80- வயதில் சென்னையில் ஜூன் 20-2017 அன்று இறையடி சேர்ந்தார்.



"தமிழாய் பிறந்து
கவிதையால் வளர்ந்து
ஹைக்கூவாய் வாழ்ந்து
கஸலாய் மறைந்த "கவிக்கோவே"
நின் தாள்
போற்றுகின்றேன்...!"

-குமர.தர்மசீலன்

அனைவராலும் கவிக்கோ என்று அறியப்படும் அப்துல் ரகுமான் மஹி என்னும் சையத் அகமது ஜீனத் பேகம் இளையோருக்கு 1937 நவம்பர் 9 அன்று மதுரை கிழக்கு சந்தைப்பேட்டையில் பிறந்தார் இவருக்கு அருள்வண்ணன் என்ற புனைப்பெயரும் உண்டு.

திரு.குமர.தர்மசீலன், இதழாசிரியர்

நாளை

# நமதே

கூராக தீட்டப்படாத

ஆயுதமும் அறிவும்

எதையும்

வெட்டப் போவதில்லை

அகமும் தமிழே — முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு
அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு
சிவம் அறக்கட்டளை


தொடர்பிற்கு :

9597887847
8870884969




# அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com